## சென்னை மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# வாகனம் நிறுத்த பயண அட்டை மூலம் கட்டணம்!

சென்னை, ஜூலை.23-

சென்னைமெட்ரோரெயில்பயணிகளின் தடையற்றபோக்குவரத்தைஎளிதாக்குவதற்காக சென்னை மெட்ரோ ரெயில் பயண அட்டை மூலம் வாகனம் நிறுத்தும் கட்டணங்களைசெலுத்தும்ஏற்பாட்டைசென்னை மெட்ரோரெயில்நிறுவனம்அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி நடப்பு ஜூலை மாதத்தில் சோதனை அடிப்படையில் அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக வருகின்ற ஆகஸ்டு1-ம்தேதிமுதல்சென்னைமெட்ரோ ரெயில்நிலையங்களில்உள்ளவாகனம்நிறுத்துமிடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான கட்டணத்தை மெட்ரோ ரெயில் பயண அட்டை மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

இதே போன்று மெட்ரோ ரெயில் பயண அட்டைஇல்லாதபயணிகள்மற்றும்பொது மக்கள் மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாகனத்தைநிறுத்தமெட்ரோநிலையங்களில் உள்ளவாடிக்கையாளர்சேவைமையம்மூலமாகவோ அல்லது டிக்கெட் கவுண்டர்கள் மூலமாகவோமெட்ரோரெயில்பயணஅட்டையை வாங்கி அதன்மூலம் மட்டுமே கட்டணம் செலுத்தலாம்.